**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மாணமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மாணமதுரை**

**2025ம் ஆண்டு ஜீன் 19ம் நாள் வியாழக்கிழமை**

**இடைக்கால மனு எண். 2/2024**
**இன்**
**அசல் வழக்கு எண். 21/2021**

1. ராபர்ட் குழந்தைநாதன்
2.செசிலியா ...... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**/ எதிர் /**

1. பெலிக்ஸ் சகாயராஜ்
2.சூசை
3.ஜான்பிரிட்டோ பிரவீன்
4.டென்னிஸ்ராஜ் ..... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என்முன்பு 12.06.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாராார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.L.சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளநிலையில், மனுதாரர் தரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் தரப்பில் ஆர்டர் 8 ரூல் 9 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின் தங்கள் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள அனுமதி வேண்டி அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தங்கள் முன்பாத்தியஸ்தரான ஜெயராமன் பட்டா மாறுதல் உத்தரவின்பேரில் சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலரிடம் ப.மு.எண்.பி1/2922/ 2022 என்ற எண்ணில் மேல்முறையீடு தாக்கல் செய்திருந்ததாகவும், தாங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்த காலத்தில் மேற்படி மனு நிலுவையில் இருந்துவந்தநிலையில் கடந்த

29.03.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதிக்கு தாவா சொத்துக்களுக்கு பட்டா வழங்க சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளது ஏற்புடையதல்ல என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி விபரங்கள் குறித்து தங்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது தங்கள் தரப்பு வாதத்திற்கு மிகவும் அவசியமாக இருப்பதால், தாவா மனுவினை அனுமதியளித்து உத்தரவிட வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :–**

மனுதாரார்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஜீன் 19ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.19 10:53:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.19 10:55:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No.2/2024**
**in**
**OS. No.21/2021**

**Dated: 19.06.2025**